## கோவை மெடிக்கல் சென்டரில்

# புற்றுநோய் சிகிச்சைக்கு நவீன வசதி

## டாக்டர் சுதாகர் தகவல்

கோவை,ஏப்.13: கோவை மெடிக்கல் சென்டரில் புற்றுநோய் சிகிச்சைக்கு நவீன வசதிகள் உள்ளதாக அம்மருத்துவமனை புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் சுதாகர் தெரிவித்தார்.

கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் புற்று நோய் சிகிச்சை மையம் செயல்பட்டு வருகிறது. இம் மையத்தின் மருந்தியல் நிபுணர் டாக்டர் என்.சுதாகர் கூறியதாவது: உலகில் புற்றுநோய் பாதிப்பானது மனிதனுக்கு உடல் அளவில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்தியாவில் ஒரு ஆண்டுக்கு சுமார் 5 லட்சம் பேர் புற்று நோயால் இறக்கின்றனர். புற்றுநோய் ஒரு வியாதி என்பதை விட தேசிய பிரச்னை என்றளவுக்கு உருவெடுத்துள்ளது. இந்தியாவில் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் மற்றும் கர்ப்பப்பை வாய் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம். புகைபிடிப்பதால் ஏற்படும் வாய்ப்புற்று நோய், நுரையீரல் புற்றுநோயால் அதிகளவில் ஆண்கள் பாதிக்கப்படுகின்றனர். புற்று நோயை பூரணமாக குணமாக்க ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிய வேண்டும்.

கோவை மெடிக்கல் சென்டர் புற்றுநோய் மையத்தில் ஆரம்ப கட்டத்திலேயே புற்றுநோயை கண்டறிய 'ஸ்கிரீனிங் டெஸ்ட்' என்ற முறை பயன்பாட்டில் உள்ளது.

இதற்கு நவீன கருவிகள் உள்ளன. பெண்களுக்கான மார்பக புற்றுநோயை கண்டறிய மெமோகிராம் என்ற கருவியும், கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பாதிப்பை கண்டறிய பேப்ஸ் மியரும் உள்ளன. ஆண்களுக்கான நுரையீரல் புற்றுநோயை 'லோ டோஸ் சிடி ஸ்கேன்' மூலம் ஆரம்ப கட்டத்திலேயே கண்டறியலாம். மலக்குடல் புற்றுநோயை கண்டறிய 'கோலோனோ ஸ்கோபி'என்ற நவீன பரிசோதனை மூலம் தெரிந்து கொள்ளலாம்.

உடலில் புற்றுநோய் எந்தெந்த உறுப்புக்களில் பரவி உள்ளது என்பதை 'பெட் சிடி ஸ்கேன்' என்ற அதி நவீன கருவியால் பரிசோதனை செய்து மிகத்துல்லியமாக அறியலாம்.

பரிசோதனைக்கு பிறகு அதற்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்படும். சென்னைக்கு அடுத்தபடியாக கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் மட்டுமே இப்பரிசோதனை கருவி உள்ளது. கோவை மெடிக்கல் சென்டரில் புற்று நோய்க்கு சிகிச்சை அளிக்க பல துறை சார்ந்த மருத்துவக்குழு உள்ளது. ஒரு நோயாளியை இக்குழுவினர் ஆராய்ந்த பின்னர் அதற்கு தகுந்த சிகிச்சை கையாளப்படுகிறது. உடலில் பாதிப்பை ஏற்படுத்தும் அனைத்து புற்று நோய்களுக்கும் மருந்தியல் புற்றுநோய் துறையால் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. புற்றுநோய் கட்டியில் உள்ள அணுக்களை மட்டுமே


டாக்டர் சுதாகர்

அழிக்க கூடிய தன்மைவாய்ந்த மருந்துகள் பயன்படுத்தப்படுகிறது. இதனால் புற்று நோயால் பாதித்த வயதானவர்களுக்கு கூட அவர்களின் உடல் ஆரோக்கியம் பாதிக்காத அளவிற்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முடி உதிர்தல் தவிர்க்க முடியாத ஒரு பிரச்னையாக இருந்தது. எனவே முடி உதிர்வதை தவிர்க்கும் வகையில் 'ஸ்கேல்ப் கூலிங் சிஸ்டம்' என்ற கருவியை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்து கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் காத்திருக்காமல் ஒரே நாளில் சிகிச்சை முடித்து செல்லக்கூடிய அளவிற்கு நவீன வசதிகள் உள்ளன.

புற்றுநோயை ஆரம்ப கட்டத்தில் கண்டுபிடித்தால் முற்றிலும் குணமாக்கலாம். முற்றிய நிலையில் மருத்துவமனைக்கு வந்தால் நவீன மருந்துகள் மூலம் கட்டுப்படுத்தலாம்.

எனவே நோய் வரும் முன் காப்பதே சிறந்தது. புகையிலை மற்றும் குடிப்பழக்கம்,உணவு பழக்க வழக்கத்தை மாற்றி அமைத்து புற்றுநோய் வராமல் தவிர்க்கலாம். இவ்வாறு டாக்டர் சுதாகர் கூறினார்.